






# எல்லா முரண்பாடுகளுக்கும் எதிரான விசுவாசம்

பாடம் 5 மே 4, 2024

"நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்."

(சங்கீதம் 119:11)





16ஆம் நூற்றாண்டில், வைக்ளிஃப்பிற்கு 200 வருடங்களுக்கு முன்பதாகவே வேலை துவங்கிவிட்டது, “சீர்த்திருத்தத்தின் நட்சத்திரம்,” பிரகாசமாக ஜொலிக்க ஆரம்பித்தது. சீர்த்திருத்தத்தின் சிறப்பு வந்துவிட்டது.



ஐந்து அடிப்படை கருத்துக்களை கொண்டது இந்த சீர்த்திருத்தம்:

- ★ 1. *சோலா ஸ்கிரிப்சரா* (வேதவாக்கியம் மாத்திரமே)
- ★ 2. *சோலா க்ரேசியா* (கிருபை மாத்திரமே)
- ★ 3. *சோலா ஃபைடு* (விசுவாசம் மாத்திரமே)
- ★ 4. *சோலுஸ் கிறிஸ்டஸ்* (கிறிஸ்து மாத்திரமே)
- ★ 5. *சோலி டியோ க்ளோரியா* (தேவனுக்கு மாத்திரமே மகிமை)




**விசுவாசத்தின் அஸ்திபாரம்:**

- *சோலா ஸ்கிரிப்சரா / சோலி டியோ க்ளோரியா.*
- வேதம் எல்லாருக்கும் கிடைக்கப்பெறுதல்.
- வேத மொழிபெயர்ப்பாளர்.

**இரட்சிப்பின் அஸ்திபாரம்:**

- *சோலா க்ரேசியா / சோலா ஃபைடு / சோலுஸ் கிறிஸ்டஸ்.*
- கிருபையில் வளருதல்.

# விசுவாசத்தின்
# அஸ்திபாரம்

# சோலா ஸ்கிரிப்சரா / சோலி டியோ க்ளோரியா

"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது." (எரேமியா 15:16)

16ஆம் நூற்றாண்டின் சீர்திருத்தவாதிகள் உலகை உண்மையில் மாற்றினர். ஆனால் அதில் சிறப்பு எதுவும் இல்லை என்பதை அவர்கள் தெளிவுப்படுத்தினர். அவர்கள் தேவனால் மாற்றப்பட்ட மக்கள். இந்த காரணத்தினால் தான், அவர்கள் அறிவித்தார்கள்: "தேவனுக்கு மாத்திரமே மகிமை".



இந்த மாற்றம் அவர்களில் எவ்வாறு ஏற்பட்டது? அந்த அற்புதத்தை நிகழ்த்தியதே தேவனுடைய வார்த்தையை அவர்கள் படித்ததுதான்.

வேதம் அவர்களுக்கு என்ன செய்தது, அது நமக்கு என்ன செய்யமுடியும்?

- அதுதான் விசுவாசத்தின் அஸ்திபாரம்
- அவருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிப்பதன் மூலம் நமது விசுவாசத்தையும் தைரியத்தையும் புதுப்பிக்கும்
- அதன் இலைகள் ஜீவ விருட்சத்தின் கனிகளை போன்றது
- மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் ஒளியை பரப்ப உதவுகிறது
- அது நமக்கு வழிகாட்டுதலையும், உறுதியையும், வலிமையையும், ஞானத்தையும் தருகிறது
- உடல்ரீதியாகவும், மன ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் நம் வாழ்க்கையை வாழவைக்கிறது

இருண்ட காலங்களில், வேதம் அதன் போதனைகளுக்கு உண்மையாக இருப்பதற்கு அவர்களின் உயிரை கொடுக்கும் அளவிற்கு அவர்களின் வாழ்க்கையை நிறைவு செய்தது மற்றும் இன்று, அது உங்கள் வாழ்வையும் நிறைவு செய்கிறதா?

# வேதம் எல்லாருக்கும் கிடைக்கப்பெறுதல்

“தேவவசனம் வளர்ந்து பெருகிற்று.” (அப் 12:24)



டிண்டேல் (1494-1536) வைக்ஃளிபின் வேதாகமத்தில் உள்ள பிழைகளை சரி செய்ய தொடங்கினார் (லத்தினில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது), அசல் மொழிகளில் இருந்து நேரடி மொழிபெயர்ப்பை உருவாக்கினார். அவர் கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட புதிய ஏற்பாட்டை வெளியிட்டார்.

மைல்ஸ் கவர்டேல், ஹீப்ரு மூல பாஷையிலிருந்து பழைய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்புடன் டின்டெலின் பணியைத் தொடர்ந்தார். எனவே, 1535ல் ஆங்கிலத்தில் முதன்முதலாக அச்சிடப்பட்ட முழு வேதாகமம் வெளியிடப்பட்டது.






ஆங்கிலம் பேசுபவர்களிடையே பரவலாக பயன்படுத்தப்படும் வேதாகம மொழிபெயர்ப்புக்கு இந்த பதிப்பு அடிப்படையாக அமைந்தது: கிங் ஜேம்ஸ் பதிப்பு, 1611ல் வெளியிடப்பட்டது. டீண்டேல், கவர்டேல் மற்றும் இந்த பதிப்பை தயாரித்த வேத அறிஞர்களின் பணி மில்லியன் கணக்கான மக்களை பாதித்து, அவர்களை தேவனுடைய அறிவுக்கு கொண்டு வந்தது.

ஆர்வமூட்டும்விதமாக, சீர்த்திருத்தத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத ஒரு நபர் இந்த மொழிபெயர்ப்புகளில் ஒரு தவிர்க்கமுடியாத உதவியாக இருந்தார்: ரோஸடர்டாமின் எராஸ்மஸ், அந்நாட்களில் புதிய ஏற்பாட்டை கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்த்தார்(சீர்த்திருத்தவாதிகளின் அனைத்து மொழியெர்ப்புகளுக்கும் அது அடிப்படையாக அமைந்தது).



# வேதம் எல்லாருக்கும் கிடைக்கப்பெறுதல்

வேதாகமத்தின் ஆங்கில பதிப்பு வெளியிடப்பட்டபோது, மற்ற சீர்த்திருத்தவாதிகளும் தங்கள் தாய்மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்த்தனர். இந்த வகையில், ஐரோப்பாவில் வசிப்பவர்கள் வேதாமத்தை நேரடியாக வாசிக்கமுடியும், இது ஒரு புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட “புதிய உலகம்”.



மார்டின் லுத்தர்
ஜெர்மன்(1534)



பியரி ராபர்ட் ஆலிவ்டன்
ப்ரன்ஞச் (1535)



ப்ரஸ்ட் பைபிள்
போலிஷ்(1563)



கேசியோடோரோ டி ரெய்னா
ஸ்பானிஷ் (1569)



க்ராலிஸ் பைபிள்
செக் (1579)




ஜோனஸ் ப்ரட்குனாஸ்
லித்துனியன் (1579)



ஜூரிஜ் தல்மாட்டின்
ஸ்லோவேனியன் (1584)



ஜியோவன்னி டியோடடி
இத்தாலியன் (1607)



வோவோ ப்ரய்ரா டி அல்மய்ரா
போர்த்துகிஸ் (1691)

# வேத மொழிப்பெயர்ப்பாளர்

"வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது."
(2 பேதுரு 1:20)



மார்டின் லூத்தர் முதலாவது வேதாகமத்தை லத்தின் மொழியில் வாசித்த போது, அவருடைய வாழ்க்கை மாற்றம்பெற்றது.
அதன் பக்கங்களை அவர் புரட்டின போது, ஒரு பெரிய வல்லமை தன் மனதை ஒளிரச் செய்வதை அவர் அறிந்திருந்தார். சுவிசேஷம் உயிருள்ளதாகவும் பயனுள்ளதாகவும் மாறியது. இருண்ட மரபு மறைந்து, கிறிஸ்துவின் கிருபை எழுந்தது. அவருடைய மனதை ஒளிரச் செய்த அந்த வல்லமைதான் என்ன?

பரிசுத்த ஆவியானவர், வேதாகமத்தின் அதிகாரபூர்வமான ஒரே மொழிபெயர்ப்பாளர், அவரே அதிலுள்ள சத்தியத்தை வெளிப்படுத்தினார். அதே பரிசுத்த ஆவியானவர் நாமும் வேதகமத்தை புரிந்துகொள்ளும்படி நமக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறார்! (யோவான் 14:26; 16:13).

அதிகாரபூர்வ சபை கற்பித்த மரபுகளுக்கும் வேதாகமத்தில் உள்ள உண்மைகளுக்கும் இடையில் எந்த இணக்கமும் இல்லை என்பது அந்த தருணத்திலிருந்து தெளிவாக தெரிந்தது. விசுவாசம் மற்றும் நடத்தையின் ஒரே விதி வேதாகமத்தில் உள்ளது, மேலும் அது பரிசுத்த ஆவியானவரால் நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது.



# இரட்சிப்பின் அஸ்திபாரம்

# சோலா க்ரேசியா / சோலா ஃபைடு / சோலுஸ் கிறிஸ்டஸ்

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;" (எபேசியர் 2:8)

எபேசியர் 2:8ல் இருந்து 3 அடிப்படையான உண்மைகள் வெளிப்படுகின்றன.

1. நாம் கிருபையினால் மாத்திரமே இரட்சிக்கப்படுகிறோம்
2. கிருபையை நாம் பெற்றுக்கொள்வது விசுவாசத்தினால் மாத்திரமே
3. இதுதான் தேவனுடைய ஈவு, அவருடைய மகனின் பரிசு: கிறிஸ்து மாத்திரமே



நம்முடைய பாவத்தினிமித்தம், நாம் நித்திய மரணத்தினால் தண்டிக்கப்படுகிறோம் (ரோமர். 6:23). என்றாலும், நம்முடைய பாவக்கடனை கொடுப்பதற்கும் நித்திய ஜீவன் நமக்கு கிடைக்கப் பெறுவதற்கும் தேவன் ஒரு வழியை கொடுத்திருக்கிறார் (ரோ. 6:23).

தேவன் ஏன் நம் பாவக்கடனை அடைக்கவேண்டும்? ஏனென்றால் நம்மால் எந்த வகையிலும் அதை திரும்ப செலுத்த இயலாது (சங். 49:8; எபே. 2:9).

மார்டின் லூத்தர் கிறிஸ்து மட்டுமே தனது இரட்சிப்பின் ஆதாரமாக இருப்பதை கண்டுபிடித்த போது, அவர் அந்த உண்மையை பிரசங்கிக்க தொடங்கினார். ஆயிரக்கணக்கானோர், எதிரியின் வஞ்சகத்தால் பிணைக்கப்பட்டிருந்தவர்கள் விடுவிக்கப்பட்டு மாற்றம் அடைந்தனர்.

இரட்சிப்பு இலவசம் என்றாலும், அதன் விலை எல்லையற்றது, அனைவருக்கும் போதுமானது (யோவான் 3:16; ரோமர். 8:32).

# கிருபையில் வளருதல்

"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்." (2 பேதுரு 3:18)





இடைக்காலத்தில், மக்கள் திரள் கூட்ட ஆராதனை, காளைகள், காயங்கள் மற்றும் யாத்திரைகள் மூலம், தங்கள் இரட்சிப்பைப் பற்றி (மற்றும் அவர்களின் முன்னோர்கள்) யோசித்தனர்.



இவையனைத்தும் வேதனையாக இருந்தது. அது ஒருபோதும் போதுமானதாக இல்லை. அவர்கள் கிறிஸ்துவின் கிருபையை கண்டுபிடிக்கும் வரை. அந்த தருணத்திலிருந்து அவர்கள் உண்மையிலேயே சுதந்திரமாக உணர்ந்தனர்.

அந்த சுதந்திரம் அவர்கள் சட்டத்தை இகழ்வதற்கு வழிவகுத்ததா அல்லது அதற்கு கீழ்படிய செய்ததா?

ஜான் வெஸ்லி (1703-1791), மெதடிஸட் இயக்கத்தின் நிறுவனர்களில் ஒருவர், லூத்தரின் ரோமர் புத்தகக்கான அறிமுகத்தை வாசித்து நெகிழ்ந்தார். அவருடைய புதிய விசுவாசம் அவரை கிருபையில் வளர்ச்சி பெற வழிவகுத்தது.



கிருபையால் தான் இரட்சிக்கப்பட்டதை அறிந்துகொள்வது, நியாயப்பிரமாணத்தை இகழ்வதற்கு வழிவகுக்கவில்லை, மாறாக அதை மிகவும் கவனமாக படிக்க வேண்டும், இதனால் அவருடைய வாழ்க்கை கிறிஸ்து தன்னிடம் எதிர்பார்க்கும் வாழ்க்கையுடன் ஒத்துபோவதை அவர் உணர்ந்தார்.